ஆடவர், வனிதையர்
விரும்பும் அழகு
வண்ணப் புடவைகளுக்கு
சிறந்த இடம்:
ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13. 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(பி-513)

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

முகூர்த்தப்
பட்டுப் புடவைகளை
தெரிவு செய்திட
இன்றே நாடுங்கள்
ச. லிங்கநாதன்
வண்ணச் சோலை
13. 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(பி-513)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 24 புதன்கிழமை 08 - 03 - 1995 UTHAYAN A Lively National Tamil Daily - கதிர் - 101




ராஜதந்திரிகள் வள்ளத்தீலிருந்து இறங்கி வருவதை முதலாவது படத்திலும் அவர்கள் விடுதலைப் புலிகளின் சோதனை நிலயத்துக்குச் செல்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். (ஒ)

# புனரமைப்புக்கான சூழ்நிலையை ஏற்படுத்த
# ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

## யாழ். வந்த ராஜதந்திரிகள் மூலம் மேற்குலகிடம் புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கு — கிழக்கில் அபிவிருத்தி மற்றும் புனர் நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுவதற்கூரிய சூழ்நிலையைத் தோற்றுவிக்கும்படி ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

யாழ்.வந்த மேற்கு நாடுகளின் ராஜதந்திரிகள் மூலம் மேற்குலக நாடுகளிடம் இவ்வாறு விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பன்னிரண்டு மேற்கு நாடுகளின் – கொழும்புத் தூதரகங்களைச் சேர்ந்த— 12ராஜதந்திரிகள் நேற்றுக் காலை கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து, அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வாகன அணி மூலம் யாழ் வந்துசேர்ந்தனர்.

நேற்றுக் காலையே விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தில் அவர்கள் சந்தித்துப் பேசினர்.

இப்பேச்சுக்களின் போது அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகள் பிரஸ்தாபித்ததாகவும் —

அரசாங்கம் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்தால், அதைப் பரிசீலிக்கத் தாங்கள் தயாராக இருப்பதாக புலிகள் பிரதிநிதிகள் பதிலளித்ததாகவும் தெரியவந்தது

இந்தப் பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் வலியுறுத்திய விடயங்களை புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் பத்திரிகையாளருக்குவெளியிட்டார்.

( 6ஆம் பக்கம் பார்க்க)



நேற்று யாழ்ப்பாணம் வந்த ராஜதந்திரிகளும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போது எடுக்கப்பட்ட படம் (ஒ)

## தமது நாடுகளுக்கு அறிக்கை ராஜதந்திரிகள் அனுப்புவர்

யாழ்ப்பாணம், மார்ச். 8

யாழ். வந்துள்ள மேற்குலக நாடுகளின் ராஜதந்திரிகள் கொழும்பு திரும்பியதும் யாழ். மக்கள் நிலை குறித்து தத்தமது நாட்டு அரசுகளுக்கு அறிக்கை சமர்ப்பிப்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மக்கள் அவலங்கள், வடக்கில் மேற்கொள்ளவேண்டிய புனரமைப்புப் பணிகள், உடனடித் தேவைகள் சம்பந்தமாக அறிக்கைகள் தயாரித்து தங்கள் அரசுக்கு அனுப்பவிருப்பதாக யாழ். வந்த மேற்குலக ராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

தமது பயணம் பயன் உள்ளதாக அமைந்ததாகவும் —

மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை நேரில் அறிய முடிந்தது என்றும் —

பின்லாந்து நாட்டு ராஜதந்திரி குறிப்பிட்டார்.

## நகரின் பல பகுதிகளுக்கும் ராஜதந்திரிகள் விஜயம்

யாழ்.வந்தமேற்குலக ராஜதந்திரிகள் நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை மக்களிடம் நேரில் கேட்டறிந்தனர்.

யாழ்.ஆஸ்பத்திரி, யாழ். நகரப் பகுதி, யாழ். செயலகப்பகுதி, கரையோரப் பகுதி ஆகியவற்றுக்குச் சென்ற அவர்கள் அங்கு இராணுவ நடவடிக்கைகளால் சேதமுற்ற கட்டடங்களைப் பார்வையிட்டனர்.

யாழ். செயலகத்துக்குச் சென்ற அவர்கள் அங்கு அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் திணைக்களத் தலைவர்களுடன் கருத்துப் பரிமாறினர்.

அரச சார்பற்ற நிறுவனங்களை இன்று சந்திக்கும் ராஜதந்திரிகள் இன்று பிற்பகல் பருத்தித்துறை ஊடாக கப்பலில் திருமலை திரும்புவர்.

(உ-3-7-15 51)

## நேற்றைய பேச்சுக்களில் பங்குபற்றிய பிரதிநிதிகள்

மேற்குலக ராஜதந்திரிகளுடன் நேற்று பேச்சு நடத்திய விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் குழுவில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வன் மற்றும் புலிகள் பிரமுகர்களான திரு வே இளங்குமரன், திரு. வே. பாலகுமாரன், திரு. சு. டொமினிக், திரு. ரவி, திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

கனடா, ஜேர்மனி, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்ஸர்லாந்து, பின்லாந்து, பிரான்ஸ், பிரிட்டன், நோர்வே ஜப்பான், நெதர்லாந்து, சுவீடன் ஆகிய பன்னிரண்டு மேற்கு நாடுகளின் கொழும்புத் தூதரகங்களைச் சேர்ந்த ராஜதந்திரிகள் நேற்றைய பேச்சுக்களில் பங்குபற்றினர்.

(உ. 3)

## பிரபாவின் பதில் கண்டு சந்திரிகா அதிர்ச்சியாம்

கொழும்பு, மார்ச் 8

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக தூதுவர் மூலம் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்ளும் யோசனையை விடுதலைப்புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரன் நிராகரித்தது குறித்து ஜனாதிபதி சந்திரிகா அதிர்ச்சி அடைந்தார் என்றும்—

அதனை அடுத்து பிரெஞ்சு நாட்டுத் தூதர் ஒருவரை கருத்துப்பரிமாற்றத்துக்கு பயன்படுத்தும் தமது யோசனையை சந்திரிகா கைவிட்டுவிட்டார் என்றும் "சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார இதழின் அரசியல் செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

சந்திரிகாவின் தூதுவர் மூலம் கருத்துப்பரிமாற்றச் செய்யும் யோசனையை நிராகரித்து திரு பிரபாகரன் அனுப்பிய பதில் கடிதத்தில்— "நாம் நேரடியாகப் பேசுவோம்: வெளியார் எவரும் தேவையில்லை."— என்று

(5 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகள்
## நீர் அருந்துவதையும் இன்று முதல் கைவிடுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 8

நேற்று வரை 6 நாட்களாக நீராகாரம் அருந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்த யுத்தக் கைதிகள் இன்றுகாலை 8மணியுடன் நீர் அருந்துவதையும் நிறுத்தவுள்ளதாக நேற்றுத் தெரிவித்தனர்.

அரசாங்கம் எம்மைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கை வீண்போயுள்ளதாக குறிப்பிட்ட உண்ணாவிரதிகள் தங்களால் நடக்கக்கூட முடியாமல் இருப்பதாகக் கூறினர்.

செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களின் உதவியுடனேயே எழும்பக்கூடியதாக இருக்கிறதுஎன்று பாயில்படுத்திருந்த நிலையில் மெதுவாக பேசினார் அம்பாறையைச் சேர்ந்த போர்க் கைதிகளில் ஒருவரான டி.ஜி. தர்மவர்த்தனா.

உடல் மிக நலிவுற்று இறக்கும் தறுவாயில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எதுவும் எந்தவிதமான பயனையும் அளிக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் யாழ் வந்த [illegible]

[5 ஆம் பக்கம் பார்க்க]

## இன்று இயங்கமாட்டா

யாழ்ப்பாணம், மார்ச் 8

அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும் குடும்ப அட்டை பதிவுச் செயலகங்களும், விசாரணைப் பகுதிச் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகமும் அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு இன்று இயங்கப்படமாட்டா என்று போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர். (ஒ)

## புனரமைப்பு திட்டம் குறித்து புலிகள் அறிக்கைவழங்கினர்

யாழ்ப்பாணம், மார்ச்.8

யாழ். மாவட்டத்தில் அவசரமாக மேற்கொள்ள வேண்டிய புனரமைப்புத் [illegible] பான திட்ட அறிக்கை [illegible] யாழ், வந்த மேற்குலக ராஜதந்திரிகளிடம் நேற்றைய சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் கையளித்தனர்.

அவசரமாக [illegible] டியாக மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாக அறியவந்தது.

## ஐம்பது ஈழத் தமிழர்களை நோர்வே திருப்பி அனுப்பும்

யாழ்ப்பாணம், மார்ச் 8

நோர்வேயில் இருந்து சுமார் ஐம்பது ஈழத் தமிழர்கள் மட்டுமே தாயகத்துக்கு திருப்பி அனுப்பப்படவிருப்பதாக நோர்வே நாட்டின் கொழும்பு தூதரக அரசியல் அதிகாரி திரு. பிராஸ்ஹாட் தெரிவித்தார்.

ராஜதந்திரிகள் குழுவில் அங்கம்வகித்து நேற்று யாழ் வந்த அவர், மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

"ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

"இவர்கள் தொடர்பான விசாரணைகள் தற்சமயம் நடைபெறுகின்றன. சுமார் 50பேர் வரையிலேயே திருப்பி அனுப்பப்படுவர்.

( 6ஆம்பக்கம் பார்க்க)

## யாழ் நகரில் இன்று மாணவரின் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச்.8

பல்கலைக்கழக அனுமதி முறையால் பாதிக்கப்பட்ட வடபகுதி மாணவர்கள் இன்று காலை யாழ் நகரில் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி யாழ் செயலகத்தைச் சென்றடையும்.

ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றை அங்கு வைத்து யாழ் அரச அதிபரிடம் மாணவர்கள் கையளிப்பர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்துலக மகளிர் தினம்

மேற்படி விடயம் தொடர்பாக, 08-03-1995 இல் நடைபெறவிருக்கும் அனைத்துலக மகளிர் தின விழாவில் சமூக அபிவிருத்தி மன்றம், யாழ்ப்பாணத்தின் பணியாளர்கள், கழக அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி:

– நிர்வாகச் செயலாளர்.
சமூக அபிவிருத்தி மன்றம்

[35563]

## பதவி வெற்றிடம்
## மயான காவலாளி

கொக்குவில் இந்து மயானத்திற்கு காவலாளி தேவை. மயானத்திற்கு அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வதிவிடத்தில் குடும்பமாக வசிக்கவேண்டும். விண்ணப்பங்கள் 15-3-95 ஆம் திகதிக்கு முன், எழுத்து மூலம் சபைத் தலைவரிடம் கையளிக்கவேண்டும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

பொ. யோகலிங்கம்
தலைவர்

விலாசம்
"கோவிந்த வாசா"
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(35550)

## நிலைவில் நீங்கா
## 31-ம் நாள் நினைவலைகள்



தோற்றம்: 07 — 08 — 1933

மறைவு: 06 — 02 — 1995

### திருமதி
### இராஜேஸ்வரி இராஜரட்ணம்

ஊரோடு கூடி வாழ்ந்தீர் உறவினர்க் ஓம்பல் செய்தீர்
பேரோடு எம்மைப்பெற்று பெருமையால் வளர்ந்து விட்டீர்
ஊனினை உருக்கி எம்தன் உடலெல்லாம் சொரிந்து வளர்த்தீர்
நோயினில் வீழ்ந்து பாயில் படுக்கையாய் கிடந்த போதும்
வாயினில் சுடுசொல்லொன்றும் பேசியே அறியா அம்மா
பாரினில் இனிமேல் உம்போல் பாசத்தை யாரினித் தருவாரம்மா
நெஞ்சினில் துக்கம் முற்றி நெடுசிரசறைந்த போதும்
பெருகுரலெடுத்து அலற பேதையர் அறிகிறோமம்மா
ஊழிகள் வந்து போகும் உலகமும் மறைந்து தோன்றும்
ஊனினைத் தந்த அம்மா உம்மை உயிரினில் பொறித்துக் கொண்டோம்
வானவர் ஓங்கிவாழும் வையத்தில் உம்தன் ஆன்மா
ஓமினில் ஒடுங்கி சாந்தி ஒன்றையே பெறுக அம்மா

பிரிவால் துயருறும்
கணவன், மக்கள், மருமக்கள்.
சகோதரன், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(8272)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 11 — 04 — 1934

உதிர்வு: 28 — 02 — 1993

### அமரர்
### கிருஷ்ணப்பிள்ளை வில்வராஜா

திதி: 08. 03. 95

எங்கள் தந்தையே
எங்கே இருக்கின்றீர்?
பாரினில் நாம் வாழப் பார்த்திருப்பீர் என்றிருந்தோம்
பாதியில் எமைவிட்டு பிரிந்துவிட்டீர்.
பாசத்தை பொழிந்துபண்புடன் வளர்த்திட்டு
நேசமுடன் ஒரு வார்த்தை கூறாது சென்றுவிட்டீர்
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப்

பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை

(35572)

## உற்சவகால நிகழ்வுகள்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இலட்சார்ச்சனைப் பூர்த்தி இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து பிற்பகல் 6-45 மணிக்கு திரு. த. சிவகுமாரனின் 'ஸ்ரீமத் பாகவதம்' தொடர் சொற்பொழிவுப் பூர்த்தியும், 8 மணிக்கு இன்னிசைக்கச்சேரியும் இடம்பெறும். [அ]

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும். [இ-14]

★ ★ ★

ஆனைக்கோட்டை நாலுகால் மடம் ஞானவைரவர் சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. 10 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இவ்விழாவில் தினமும் கும்ப பூசை, தெய்வீக சொற்பொழிவு, வசந்தமண்டப பூசை, சுவாமி வீதியுலா என்பவற்றுடன் வாகீச கலாநிதி கனக. நாகேஸ்வரனின் இராமாயணத் தொடர் பேருரையும் இடம்பெறும். (இ-14)

★ ★ ★

சுன்னாகம் ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 16ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். திருவிழா நாட்களில் பொன். கணேசமூர்த்தியின் தொடர் சொற்பொழிவு நடைபெறும்

★ ★ ★

வண் கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் ஆலய இலட்சார்ச்சனை இன்று புதன்கிழமை தொடக்கம் 10 நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறும். [இ-14]

★ ★ ★

வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

விழா நாட்களில் தினமும் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் வழங்கும் தெய்வீகப் பேருரைகள் இடம்பெறும். [இ-14)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை தொடக்கம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காரை நகர் கம்பன் கழக அமைப்பாளர் த. சிவகுமாரன் வழங்கும் இராமாயணம் தெய்வீகப் பேருரை இடம்பெறும். (இ-14)

ஆனைக்கோட்டை ஆலடி ஞானவைரவர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி 10 நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

இதனையொட்டி தினமும் "மகாபாரதம்" சொற்பொழிவு இடம்பெற்று 11ஆம் நாள் இரவு கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

★ ★ ★

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து இம்மாதம் 16ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஓ-135)

## SPOKEN ENGLISH
By
BRITTO

ஆரம்பம்:
11 · 03 · 1995
1 மணி

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்.

(சி-610)

## பிறந்தநாள் வாழ்த்து



★ செல்வன் நாதன் பகீரன் ★

கோண்டாவில் மேற்கை சேர்ந்த நாதன் - கலா தம்பதிகளின் அன்புப் புதல்வன் பகீரன் தனது பத்தாவது பிறந்தநாளை 8-3-95 இல் தம்பியோடு அமைதியாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசைத்தம்பி, தம்பி டினேஸ் அனைவரும் பல்கலையும் கற்று வைரவர் துணையால் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(35569)


Latest Editions of English Books for Higher Education, E. L. B. S. Editions, Bilingual and Monolingual Dictionaries. Books for Supplementary Readings Both English and Tamil Available

FOR SALE AT REDUCED PRICES

JAFFNA BOOK CENTRE

448, KITTU ROAD, JAFFNA.
(OPPOSITE HOSPITAL)

[C 608]



## விமான தொடர்புச் சேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
விமான தொடர் அம்பியூலன்ஸ் இணைப்பு
சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பயணப்பதிவு செய்யும் நேரம்:
காலை 9-00 முதல் மாலை 5-00 வரை

குறிப்பு:
நோயாளர்களுக்கும், வயோதிபர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

ஒரு வழிக் கட்டணம் ரூபா 3,500
[விமானக் கட்டணம் உட்பட]

தர்மிஷா ரவல்ஸ், குமரன் பயணிகள் விடுதி,
அறை இல. 6,
67, அருச்சுனா வீதி (ஸ்ரான்லி வீதி), யாழ்ப்பாணம்

குறிப்பு:- இங்கள், வியாழன் நாட்களில் மட்டும் சேவை நடைபெறும்.

(சி-731)


## கண்ணீர் அஞ்சலி

கல்வி உலகிலே
கலங்கரை விளக்காய் திகழ்ந்து
எந்நாளும் உழைத்திட்ட
தென்மராட்சி பெற்றெடுத்த

செந்தமிழ் வாணர்
யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்

### இ. சிவானந்தன்
அவர்களின்

ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி,
சாவகச்சேரி.

(சி-735)

## கண்ணீர் அஞ்சலி

கல்விச் சிந்தனையாளன், ஆரம்பக் கல்வியின் முன்னோடி, தமிழ் தன் மூச்சாக வாழ்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்

அமரர்
### இராமுப்பிள்ளை சிவானந்தன்
அவர்களுக்கு
எமது
இதயபூர்வமான அஞ்சலிகள்

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பெற்றோர்.
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை.

[35567]

## கண்ணீர் அஞ்சலி

### இ. சிவானந்தன் அவர்கள்
பிரதிக் கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம் - I

யாழ். கல்வி வலயம் - I சிரேஷ்ட கல்விப் பணிப்பாளரும், வட இலங்கை சங்கீதசபையின் உபதலைவரும், நுண்கலை மன்றத்தின் உபதலைவரும், ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் கௌரவ செயலாளரும், சிறந்த மதிநுட்பம் வாய்ந்தவருமான இராமுப்பிள்ளை சிவானந்தன் அவர்கள் இறைவனடி சேர்ந்தமை குறித்து, யாழ். இந்து மகளிர் கல்லூரியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மசாந்திக்காக என்றும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யாழ். இந்து மகளிர் கல்லூரி

[சி/734]

## கண்ணீர் அஞ்சலி

### இ.சிவானந்தன்

(பட்டப் பின் படிப்பு கல்வி டிப்புளோமா இணைப்பாளர் — பிரதி கல்விப் பணிப்பாளர் வலயம்- 1)

அன்னாருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கொள்கிறோம்.

பட்டபின் டிப்புளோமா,
சிரேஷ்ட விரிவுரையாளர்
விரிவுரையாளர்கள்
மாணவர்கள்
யா. இந்து கல்லூரி நிலையம்

(35571)

## கண்ணீர் அஞ்சலி

### இராமுப்பிள்ளை சிவானந்தன்
அவர்கள்

(பிரதிக்கல்விப் பணிப்பாளர் — கல்வி அபிவிருத்தி யாழ் வலயம் I)

கல்விப் பணியில் கருத்துடன் உழைத்து கல்விச் சமூகத்தைக் கருணையுடன் அணைத்து அனைவரையும் ஆறாத்துயரில் விட்டு அமரத்துவம் அடைந்த.

### இராமுப்பிள்ளை சிவானந்தன்

அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோட்டக்கல்வி அலுவலக அலுவலர்கள், அதிபர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
சங்கானை கல்விக் கோட்டம்.

(35574)

## கண்ணீர் அஞ்சலி

### இ. சிவானந்தன்
அவர்கள்

(பிரதிக் கல்விப்பணிப்பாளர் வலயம் - I)

எமது நிலையத்தின் இணைப்பாளராக கடமையாற்றி, அளப்பரிய சேவை புரிந்த இ. சிவானந்தன் அவர்களின் மறைவு எமது நிலையத்துக்கும், கல்வியுலகிற்கும் பேரிழப்பாகும். அன்னாரின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

போதனாசிரியர்கள், ஆசிரிய—
மாணவர்கள்.
தொலைக் கல்வி மத்திய நிலையம் -வேலணை.

[35575]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் கால சதி முயற்சி குறித்து

# ராணுவ அதிகாரி, அரசியல்வாதிகள் 25 பேர் இதுவரை விசாரணை

கொழும்பு, மார்ச் 8
1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை அடுத்து ஆட்சியைக் கைப்பற்ற திட்டமிடப்பட்டதாகக் கூறப்படும் இராணுவச்சதி முயற்சி தொடர்பாக இதுவரை 25க்கு மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகள் விசேட இரகசியப் பொலீஸ் குழுவினால் இதுவரை விசாரிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இச்சதி முயற்சி தொடர்பான கலந்துரையாடல்களை இராணுவ அதிகாரிகள் சிலர் கடந்த வருடம் ஜூலை 15 ஆம் திகதிக்கும் ஒகஸ்ட் 12 ஆம் திகதிக்கும் இடையில் நடத்தியதாகச் சொல்லப்படுகிறது

இது தொடர்பான விசாரணை இராணுவ மேஜர் ஒருவர் கொடுத்த தகவலை அடுத்தே ஆரம்பிக்கப்பட்டதாக விசாரணைக் குழுவின் தலைவரான பிரதிப் பொலீஸ்மா அதிபர் ரி. வி. சுமணசேகரா தெரிவித்தார்.

மேலும் இராணுவ அதிகாரிகள் சிலரின் வாக்கு மூலங்களை விசேட பொலீஸ் குழு நேற்று முன்தினம் பதிவுசெய்யவிருந்தது. இன்னும் சிலர் விசாரணைக் குட்படுத்தப்படவுள்ளனர்.

விசாரணைகள் பூர்த்தியடையாத நிலையில் இச்சதி முயற்சி பற்றிய விவரங்களை வெளியிட முடியாதிருப்பதாக பிரதிப் பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார்.

எனினும் இம் முயற்சி சம்பந்தமான சில ஆதாரங்கள் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## மயக்கமுறச் செய்து சங்கிலிகள் அபகரிப்பு

### மட்டக்களப்பு ரயிலில் சம்பவம்

மட்டக்களப்பு, மார்ச் 8
வெளிநாடு செல்வதற்காக கொழும்பிலுள்ள ஏஜென்சியுடன் கதைத்துவிட்டு ரயிலில் திரும்பி வந்த இரண்டு பெண்களின் தங்கச் சங்கிலிகள், அவர்களுடன் ரயிலில் அறிமுகமாகிய இரண்டு வாலிபர்களால் அபகரிக்கப்பட்டன.

இச்சம்பவம் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற இரவு ரயிலில் இடம்பெற்றது.

சம்பந்தப்பட்ட இரு இளைஞர்களும் தாம் ஏறாவூரைச் சேர்ந்தவர்கள் எனக் கூறி. தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

பெண்களுடன் நட்புடன் உரையாடிய இவர்கள், ரயில் கல்ஓயாவில் நின்றபோது இப்பெண்களுக்கு ரொட்டியை உண்ணக்கொடுத்தனர். சிறிது நேரத்தில் பெண்கள் மயக்கமடைந்தனா.

மட்டக்களப்பை ரயில் அடைந்து அனைவரும் இறங்கிய பின்னும் பெண்கள் இருவரும் இறங்காததைக்கண்ட பாதுகாப்பு ஊழியர்கள் அருகில் சென்று பார்த்த போது ஒரு பெண் மட்டும் சிறிதளவு. மயக்க நிலையிலிருந்து விடுபட்டிருந்தார். மற்றையவர் மயக்கமாகவே இருந்தார்,

அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் இருந்து அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு, இவ்விரு பெண்களும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலீசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், ரயில் பிரயாணங்களின் போது அறிமுகமில்லாதவர்களுடன் பழகும் போது எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுமாறும் கேட்டுள்ளனர். (இ-5)

## நூல் வடிவில் வெளிவரும்

யாழ்ப்பாணம், மார்ச்8
விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகமும் வெளிச்சம் சஞ்சிகையும் இணைந்து நடத்திய கலைஇலக்கியக் கருத்தரங்கில் அறிஞர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் விரைவில் நூல் வடிவில் வெளிவரும் என தமிழீழ விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழக பெறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை கூறினார்.

மூன்று நாட்கள் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் சுமார் பன்னிரண்டு கட்டுரைகள் வாசிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-111)

## பயிலுநர் ஆசிரியருக்கான செயலமர்வு

சாவகச்சேரி, மார்ச் 8
சாவகச்சேரி பிராந்திய, தொலைக்கல்வி பயிலுநர் ஆசிரியர்களுக்கான முக்கிய செயலமர்வு ஒன்று இம்மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி தொலைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது

சகல ஆசிரிய மாணவர்களும் போதனாசிரியர்களும் இச் செயலமர்வில் கலந்துகொள்ளுமபடி சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுக்கொள்கிறார். (இ-5

# தற்போதைய சமாதான முயற்சியில் புலிகளுக்கு அக்கறை இல்லையாம்

### நரசிம்மராவுக்கு 'றோ' அறிக்கை

தற்போதைய சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகள் பெரிதாக அக்கறை காட்டவில்லை என்று இந்திய உளவு ஸ்தாபனமான 'றோ' இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பரிலேயே இது தொடர்பான அறிக்கை ஒன்றை றோ, நரசிம்மராவுக்கு அனுப்பியிருப்பதாக தெரியவந்துள்ளதாக "சண்டே லீடர்" ஆங்கில வார இதழின் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

போராளிகள் யுத்த நிறுத்தத்தை வடக்கில் தம்மை பலப்படுத்திக் கொள்ளவும், கிழக்கில் ஊடுருவல் செய்யவும் பயன்படுத்திக் கொள்வர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

வட-கிழக்கு பருவப்பெயர்ச்சி காற்று மார்ச் - ஏப்ரல் மாதங்களில் முடிவடைவதை அடுத்து விடுதலைப்புலிகள் சண்டையை மீண்டும் ஆரம்பிக்கலாம் அல்லது சர்வதேச கண்டனத்துக்குள்ளாகாதவிதத்தில் பகிரங்கமான நம்பகத்தன்மையுள்ள காரணம் ஒன்றை கண்டவுடன் சண்டையை மீண்டும் ஆரம்பிக்கலாம் என்று றோவின் அறிக்கையில் ஆருடம் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## ப.நோ. சங்கத்தில் இரு கட்ட நிவாரணம்

சண்டிலிப்பாய், மார்ச் 8
பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் 23 "ஏ" "பி" க்கான கட்ட நிவாரணப்பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இடம் பெயர்ந்தோருக்கான இந்த நிவாரணப் பொருள்களை இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக் கொள்ளும்படி சங்க பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ-135-5)

## கச்சியப்பர் குரு பூசை

யாழ்ப்பாணம், மார்ச் 8
கந்தபுராண ஆசிரியர் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகளின் குருபூசை தினத்தையொட்டி நடைபெறும் கந்தபுராண விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். சைவ பரிபாலனசபை நாவலர் மண்டபத்தில் ஆரம்பமாகும்.

சபைத் தலைவர் டாக்டர் நா. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசி மங்கள வாழ்த்து உரைகளை நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் வழங்குவார்கள். தொடர்ந்து சைவப்புலவர் திருஞானசம்பந்தர் வழங்கும் 'யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாசாரம்' என்னும் சொற்பொழிவு கந்தபுராண — திரு அவதாரப்படலம் என்பன இடம்பெறும். (இ-14)

## பூங்கனியியல் தோட்ட பழம் மர நடுகைத் திட்டம்

பழங்கள் மக்களுக்கு ஊட்டச்சத்தைக் கொடுக்கும் உணவுப் பொருள்களாகும். மக்கள் பழ மரங்களை நட்டு, அவற்றின் பழங்களைப் பெற்றுப் பயன் அடையவேண்டும் என்ற நோக்கில், பழக்கன்றுகளை உற்பத்தி செய்து மக்களுக்கு நடுகைக்காக விநியோகம் செய்து உதவிவருகின்றார்கள் பூங்கனியியல் தோட்டத்தினர்.

இத்தோட்டத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாயப் பகுதியினர், கோப்பாயில் உள்ள மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணையில் செயற்படுத்தி வருகின்றனர்.

1995/96ஆம் ஆண்டு நடுகைப்பருவத்துக்கு வேண்டிய பழக்கன்று வகைகளை உற்பத்தி செய்யும் பணியில் இவர்கள் இப்போது ஈடுபட்டு வருகின்றனர். 30 ஆயிரம் பல்வேறு இன ஒட்டு மரக்கன்றுகளை உருவாக்குவதற்காக, தேவையான விதைகளை மேடைகளில் இட்டு அவை முளை கட்டியதும், அவற்றை தாய்மரத்துக்காக நடுகை செய்து பராமரித்துவருகிறார்கள். அத்தோடு தோடை, தேசிக்காய், ஒரு கிலோ தேசிக்காய் ஆகிய ஒட்டு மரங்கள் உருவாக்குவதற்கும் தாய் மரங்களையும், பாங்கொக் கொய்யா, ஜாவாக் கொய்யா, மாதுளை (ஆறு மாதத்தில் காய்க்கும் இனம்), சாதாரண மாதுளை, கொடித்தோடை, கொடி முந்திரிகை, கிட்டு 92 பப்பாசி, நெல்லி, ஜம்பு ஆகிய பழ மரக் கன்றுகளையும் மேடைகளில் வளர்த்து வருகிறார்கள். இவற்றைப் பொதி உறைகளில் இட்டு மக்களுக்கு விநியோகம் செய்ய உள்ளனர்.

இவற்றோடு அசோக்கா, கல்தேக்கு, வேம்பு, இலவம்பஞ்சு, அகத்தி, மலை வேம்பு, புளி, சவுக்கு, லாவுலு, கமுகு ஆகிய மரக்கன்றுகளும் பொதி உறைகளில் இடுவதற்காக இத் தோட்டத்தில் வளர்க்கப்படுகின்றன. [இ-5]

# சீருடை அணிந்து களத்தில் இறங்குவேன்

### அனுருத்த கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 8
இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் சமாதான ரீதியிலான அரசியல் தீர்வையே காண உறுதி பூண்டுள்ளது. பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணும் முயற்சிகள் பயனளிக்காது போனால் போர் மூலமாகவாவது சமாதானத்தைக்காண அரசு முயற்சிக்கும். அத்தகைய நிலை உருவாகுமேயானால் ராணுவ சீருடை அணிந்து நானும் போர்க்களத்தில் இறங்குவேன்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை தமது கிழக்கு மாகாண விஜயத்தின் போது களுவாஞ்சிக்குடியில் அதிரடிப்படையினர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(இவரின் உரையின் ஒரு பகுதி ஏற்கனவே உதயனில் வெளிவந்துள்ளது) (இ)

# குரேயின் சேவை கட்சிக்கு தேவை என்கிறார் ரணில்

முன்னாள் அமைச்சர் சிறிசேன குரேயின் சேவை கட்சிக்கு இன்னொரு தடவை தேவைப்படுவதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரசிங்க தெரிவித்தார்.

கட்சியின் பொதுச் செயலாளராக இருந்து கொண்டு திரு. குரே அளப்பரிய சேவைகளைச் செய்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை —

ஐக்கிய தேசியக் கட்சியில் முன்னாள் அமைச்சர் சிறிசேன குரே மீண்டும் சேர்க்கப்படும் வாய்ப்பு அதிகரித்திருப்பதாக "சண்டே ஐலண்ட்" தெரிவித்துள்ளது.

முதலில் அவர் கட்சியின் செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்படுவார் என்று தெரிவித்தாக "ஸ்ரீகோதா" வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-எ)

# அபிவிருத்தித்திட்டம் பற்றி ஆசிய அபி. வங்கி திருப்தி

இலங்கையில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன், நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அவ் வங்கி திருப்தி தெரிவித்துள்ளது.

நாட்டில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பூரண ஆதரவு அளிப்பதாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளது,

வங்கியின் செயலாற்றுப் பணிப்பாளர்கள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இக் குழு கடந்த வாரம் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுக்களின் போதே இந்த உறுதி அளிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில்—

திட்டங்கள் அமுல் செய்யப்பட்டுள்ள இடங்களுக்கு இக்குழுவினர் சென்று பார்வையிட்டு திருப்தி தெரிவித்ததாகவும்—

ஆசிய அபிவிருத்தி வங்கி நிறுவப்பட்ட காலத்தில் இருந்தே பல்வேறு நடவடிக்கைகளுக்கு வங்கி நிதியுதவி அளித்துள்ளது என்றும்—

இதுவரை பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் 160 கோடி டொலருக்கும் அதிகமான தொகையை வங்கி வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# தஞ்சை மாநாட்டு அவமதிப்புக்கு பதிலடியே எமது கருத்தரங்கு

### கலை, பண்பாட்டு கழக பொறுப்பாளர் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 8
தஞ்சாவூர் மாநாடு எமது தமிழ் அறிஞர்களை அநாகரீகமாக நடத்தியது. அதற்குப் பதிலடியாக இந்த கலை இலக்கியக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் 'வெளிச்சம்' சஞ்சிகையும் இணைந்து நடத்திய கலை இலக்கியக் கருத்தரங்கின் இறுதிநாள் நிகழ்ச்சியில் நிறைவுரை நிகழ்த்தியபோது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

எமது பெரிய அறிஞர்கள் தஞ்சை மாநாட்டில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டபோது இந்தக் கருத்தரங்கை வைக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. தமிழ் பேசும் உலகின் மிகப் பெரிய அறிஞர்களுக்கு தமிழ் நாட்டில் விளைந்த அநாகரிகத்தைத் துடைக்கக்கூடியதாக இந்தக் கருத்தரங்கு நடந்துள்ளது.

எமது அறிஞர்களுக்கு ஏற்பட்ட அவமானத்தை அவமானமாக நாம் நினைக்கவில்லை. இதற்குக் காரணமானவர்கள் யார் என்பதை உணரமுடியும்.

இந்திய ஆளும் வர்க்கம் செய்த இச்சம்பவத்திற்கு தமிழ் நாட்டிலேயே எதிர்ப்புக் குரல்கள் கிளம்பின "ஆராய்ச்சி என்பது தஞ்சையில் நடந்த கோளிக்கையல்ல' என்று துக்ளக் சஞ்சிகை கூறியுள்ளது

பத்தாவது தமிழ் மாநாட்டை நாங்கள் தமிழீழத்தில் நடத்துவோம். அப்போது இந்த அறிஞர்களும் இருப்பார்கள்

இரத்தத்தில் தோய்ந்து விடுதலை பெற வேண்டும் என்ற எண்ணம் எமக்கு இல்லை. ஆனால் உலகத்தில் அவ்வாறில்லாமல் விடுதலை பெற்ற நாடு இல்லை. தென்னாபிரிக்கா எவ்வளவு விலை கொடுத்தது?

இராணுவ முகாம்களையும் குண்டு வீச்சுக்களையும் இல்லாமல் செய்வது மட்டும் அல்ல எமது போராட்டம்.

சகல அடிமைத் தனமும் இல்லாத விடுதலைக்கானது இந்தப் போராட்டம். எல்லோருக்கும் எல்லாமுமான ஒரு இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். எனவே இந்தச் சுடர் அணையக்கூடாது. எல்லோருமாகச் சேர்ந்து இதற்கு எண்ணெய் ஊற்றுங்கள்.

நாளை வரப்போகும் அச்சம் இல்லாத பிச்சை இல்லாத தமிழீழத்தை உருவாக்குவதில் பங்குபற்றியவன் நானும் ஒருவன் என்ற நிமிர்வு உங்களிடம் மேலோங்கட்டும்.

இது போன்ற பெரிய அளவிலான கருத்தரங்கை வன்னிப் பிரதேசத்திலும் நடத்த வேண்டுமென கலைஞர்களும் இலக்கிய ஆர்வலர்களும் கேட்டுள்ளனர். அதற்கும் ஆவன செய்யப்படும். இவ்வாறு அவர் பேசும் போது கூறினார்.

# கருத்துக்குண்டுக்கு அஞ்சிய இந்திய ஆளும் வர்க்கம்!

தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் எமது அறிஞர்கள் அவமதிக்கப்பட்டது ஏன்?

அவர்கள் மாநாட்டு மண்டபத்துள் தமது கருத்துக் குண்டுகளைத் தாங்கி வந்து அங்கே அவற்றை வெடிக்க வைத்து விடுவார்கள் என்று அஞ்சியே அறிஞர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. உண்மையில் வெடிகுண்டுகளைத் தாங்கி வந்து விடுவார்கள் என்பதற்காக அல்ல.

இந்திய ஆளும் வர்க்கம் கருத்துக்குண்டுகளைக் கண்டு அஞ்சியது?

தமிழ்த் தேசியவாதம் பின்னடைவதற்கு எமது சில அறிஞர்களும் காரணமாகிறார்கள் தமிழினத்தின் அறிஞர்களை புத்திஜீவிகளைக் கொண்டு இங்கு பிரச்சினைகள் இல்லை என்ற நிலையை வெளிநாடுகளுக்குக் காட்ட அரசு முனைகிறது.

காமினி திஸநாயக்காவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்திய திரு. நீலன் திருச்செல்வம், காமினி திஸநாயக்காவை நல்லவர், வல்லவர், நேர்மையானவர், மனிதாபிமானி என்றெல்லாம் பாராட்டியுள்ளார்.

ஒரு இனத்தின் விரோதியை தமிழ்ப் புத்திஜீவி ஒருவர் பாராட்டுவது எத்தகைய செயல்? வெளிநாடுகள் என்ன நினைக்கும்?

காமினி திஸநாயக்கா எவ்வாறு நடந்து கொண்டார் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகமும் வெளிச்சம் சஞ்சிகையும் இணைந்து நடத்திய கலை இலக்கியக் கருத்தரங்கில் இறுதிநாள் நிகழ்வில் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பொறுப்பாளர் திரு. சு. ரவி இவ்வாறு தெரிவித்தார். [க-111]

## அறிவியல் வினாடி வினா போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 8
ஜூலை 5 கரும்புலிகள் நாளை முன்னிட்டு, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, தமிழீழ வானொலியுடன் இணைந்து நடத்தி வரும் "அறிவியல் வினாடி வினாப் போட்டி தொடர் - 05" யாழ். கல்விக் கோட்டத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

போட்டி விதிகளும், விண்ணப்பப் படிவங்களும் யாழ் கல்விக் கோட்ட உ/த பாடசாலைகளுக்கு விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ)

புதிய வட-கிழக்கு மாகாணத்துடன்

# திருமலையும் சேருவிலவும் இணைக்கப்பட வேண்டும்

### கூட்டணியினர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 8
திருகோணமலையும் சேருவிலவும் புதிதாக வரையறுக்கப்படும் வடக்கு — கிழக்கு மாகாணத்தில் சேர்க்கப்பட வேண்டும்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்த பிரதிநிதிக் கோஷ்டி இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

வரையறுக்கப்படும் வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறைத் தேர்தல் தொகுதியை வெளியே விடத் தாங்கள் தயார் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

அரசியலமைப்பில் பாரிய அதிகாரப் பகிர்வு ஏற்பட வேண்டும் என்று பிரதிநிதிகள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் வலியுறுத்தினார்கள்.

2 மணி 10 நிமிட நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் திரு மு. சிவசிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி நீலன் திருச்செல்வம், யோசெப் பரராஜசிங்கம், ஏ. தங்கத்துரை, பி. செல்வராசா, கே. துரைராசசிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டணியின் பொதுச் செயலாளரான ஆர். சம்பந்தன், மாவை ஏ. சேனாதிராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபெண்டியும் சந்திப்பில் கலந்து கொண்டார். [ஒ-க]

## புலிகளின் குரல் வானொலியில்

08-03-1995

புதன் இரவு

- ★ 8-01 — அனைத்துலக பெண்கள் நாள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி நந்தினி எழுதிய "வல்லினமாய் எழுவோம் வரும் பகை முடிப்போம்"
- ★ 8-20 — ஏர்முனை — "எள்ளை வளர்த்து எண்ணெய்பெறுவோம்" சித்திரம்
- ★ 8-30—செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — கருணைரவி எழுதிய "மண்ணோடு மாப்பிள்ளை" என்பன இடம்பெறும்.

09-03-1995

வியாழன் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

புதன் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — பட்டபாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று—சமூகக்கல்வி — புவனேந்திரன், விஞ்ஞானம்— ஈசன்
- ★ 6-00— சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 6-30 மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

## தொழுநோய் பற்றிய கைநூல்

வலிமேற்கு பிரதேச செயலகம், தொழுநோய் பற்றிய கைநூல் ஒன்றை வெளியிட்டுள்ளது கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற நடமாடும் செயலக சேவையின் போது, யாழ் அரச அதிபர் திரு. பொன்னம்பலம் இந் நூலை வெளியிட்டு வைத்தார். (ஒ-14-161)

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8
ஆகக்குறைந்தது 9ஆம் ஆண்டு சித்தியும், திடகாத்திரமான உடலமைப்பும் கொண்டவர்களுக்கு உடனடி வேலை வாய்ப்பு இருப்பதாக தமிழீழ தொழில் வங்கி அறிவித்துள்ளது.

தகுதி உள்ளவர்கள் 10ஆம் திகதிக்கு முன்னர் தங்களை தமிழீழ நிர்வாகசேவை மானிட மூலவள அபிவிருத்திப் பிரிவில் இயங்கும் தொழில் வங்கியில் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## தலைமைப் பதவி: ஸ்ரீமாவோ கைவிடார்

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை கைவிடுவதில்லை என்று பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தீர்மானித்துள்ளார்.

கட்சியைப் பலப்படுத்துவதே தமது நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார் (இ-எ)

## உலர் உணவு பொருள்கள் விநியோகம்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க, பாவனையாளர்கள், தமது(டிசம்பர் - 94)'க்குரிய உலர் உணவு முத்திரைகள், 22 ஏ. 22 பிக்கான உலர் உணவுப் பொருள்கள் என்பவற்றை இன்று 8 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ள முடியும் எனவும்—

இதன் பின்னர் பொருள்கள் வழங்கப்படமாட்டா எனவும் — கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ-5)

காடின்றி மழையில்லை
காற்றின்றி உயிரில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: தி கிருபாகரன், உயரப்புலம், பிள்ளையார் கோயிலடி, ஆனைக்கோட்டை. (35562)

**எரு விற்பனைக்கு**

மாட்டு எரு விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: மில்க் வைற். (சி-728)

**கோழிக்குஞ்சு விற்பனை**

கோல்டன் கொமற் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் 12-3-95 ஞாயிறு விநியோகிக்கப்படும். சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சு தேவையானவர்கள் முற்பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி, யாழ்ப்பாணம். [35558]

**இலகு திருமண சேவை**

39 வயது, புனர்பூசம் 4, செவ்வாயற்ற, கிரகபாவம் 44, Denmark பிரஜாவுரிமை உடைய மணமகன் யாழ். வரவுள்ளார். தகுந்த மணப்பெண் தேவை. தொடர்பு: ஞாயிறு து. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி (35534)

**புத்தாண்டுப்பலன்**

ஜோஸ்யரின் பங்குனிமாத சிறப்பிதழ் புத்தாண்டுப்பலன்களுடன் கல்வியியல் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. பன்னிருராசிகளுக்கான பலன், கல்வி யாருக்கு அமையும். உயர்கல்வி யோகம் இன்னும் பல அரிய சோதிட தகவல்கள். விலை 6/- மட்டுமே. (35545)

**தவறிவிட்டது**

ஒரு உடுப்பு [Bag] பாசிளாலிப் பகுதியில் இருந்து கொண்டுவரும்போது தவறுதலாக கைவிட்டுள்ளேன். கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க. அரியரத்தினம், மயிலணி வடக்கு, சுன்னாகம் என்ற எனது வீட்டு விலாசத்தில் கொண்டுவந்து ஒப்படைக்கவும். [8269]

**வீனஸ் அன்ரனா**

T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல், T. V. டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிச்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ். 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம் கிளை, கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-396]

## அனைத்து வீடியோ
### பாவனையாளருக்கும் விநியோகஸ்தர்களுக்கும்

எம் மண்ணில் நிகழ்ந்து வரும் விடுதலைக்கான போராட்டத்துடன் இணைந்து சகல வழிகளிலும் எம்மக்கள் போராட்டத்துக்கு உறுதுணையாக நிற்கின்றார்கள். எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியிலும் எமது மக்கள் உறுதி குலையாது போராடி வருகின்றார்கள் இந் நிலையில் எம் போராட்டத்தைப் புறந்தள்ளும் வகையிலும் சமூகத்தின் உன்னத வாழ்வைச் சீழிக்கும் வகையிலும் உலகெங்கிலும் இருந்து வணிக ரீதியானதும், மனங்களை மாசுபடுத்தக்கூடியதுமான வீடியோப் படங்கள் இங்கு வந்து குவிகின்றன. இவற்றினால் ஏற்படும் சுந்தகத் தன்மையைப் புரிந்து கொண்டு இப் படங்கள் எம் தேசத்தின் வாழ்வு கருதி முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதை யாவரும் அறிவீர்கள்.

இவ் நடைமுறையை மீறுவோர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் நீங்கள் அறிவீர்கள். எமது சமூகத்தில் ஏற்படும் சீரழிவுகளைத் தடுக்கும் பொருட்டு இவ் விடயத்தில் மேலும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க நாம் தீர்மானித்துள்ளோம். எனவே **10 - 03 - 1995** முதல் தமிழீழத்தில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களும், திரைப்பட வெளியீட்டுப் பிரிவினரால் வெளியிடப்படும் திரைப்படங்களும் (தமிழாக்கம் செய்யப்பட்டவை உட்பட) தவிர்ந்த வேறு திரைப்படங்கள் ஓடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். இவ்விடயம் தொடர்பாக அனைத்து வீடியோ தொடர்பானவர்களையும் நாம் பல தடவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளோம் என்பதையும் இங்கு நினைவூட்டுகின்றோம். எனவே சமூகத்தின் சீரழிவுகளைத் தடுக்கும் பொருட்டு அனைத்து தமிழீழ மக்களும் இந் நடைமுறைக்கு ஏற்ற வகையில் செயற்பட்டு பூரண ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்

கலை ஊடக இணையம்
ஐந்து சந்தி.
யாழ்ப்பாணம்.

(சி/730)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## மைதான விரிவாக்கம்
# நன்றி நவில்தல்

நாம் எமது கல்லூரி மைதான விரிவாக்கத்திற்காக கடந்த ஆண்டு நடத்திய

**"இந்துவின் இன்னிசை மாலை"**

நிகழ்ச்சி மூலம் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து மைதானத்தின் வடக்கே அமைந்துள்ள அரசடிக் காணி ஒரு பரப்பை கொள்வனவு செய்து கல்லூரிக்கு வழங்கியுள்ளோம்.

இதற்காக நிதி திரட்டிய போது பண உதவி வழங்கிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இநநிதி சேகரிப்புக்கு உறுதுணையாக நின்ற எமது கல்லூரி சமூகத்திற்கும் குறிப்பாக இந்நிதியின் பெரும் பகுதியை சேகரிக்க எமக்கு ஒத்துழைப்பு நல்கிய சமூக சேவையாளர் திரு க. தர்மகுலசிங்கம் அவர்களுக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் இதே ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினர் தென்னிந்தியப் பாடகர் திரு கே. ஜே ஜேசுதாஸ் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி மூலம் சேகரித்த நிதியிலிருந்து மைதான விரிவாக்கத்திற்காக மூன்று பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து கல்லூரிக்கு வழங்கியுள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி-
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

[சி-726]

## இசைக் கச்சேரி

இடம்: வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

காலம்: **08 - 03 - 95** புதன்கிழமை

**இலட்சார்ச்சனை பூர்த்தி வைபவம்**
4.00மணி

செஞ்சொற் சீராளன்
திரு. த. சிவகுமாரனின்
**"ஸ்ரீமத் பாகவதம்"**,
தொடர் சொற்பொழிவு பூர்த்தி 6 45

தொடர்ந்து
**"இசைக்கச்சேரி"**
8 00மணிக்கு நடைபெறும்.

பாட்டு: சோ. உமாரமண சர்மா
வயலின்: S. சர்வேஸ்வரசர்மா
மிருதங்கம்: சங்கீதரத்தினம் சி. மகேந்திரன்
கடம்: செல்வன் சு. கமலதாஸ்

நன்றி:

இங்ஙனம்:
தேவஸ்தான ஆதீன மகாசபை.

(35564]

## கண்ணீர் அஞ்சலி

### திரு. இ. சிவானந்தன்
அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம் - 1)

நற்றமிழ்க் கவிஞனாய் நல்லதோர் நடிகனாய்க்
கற்றவர் போற்றிடும் கலைஞனாய்க்
கல்விப் புலம் மறவாக் கல்விப் பணிப்பாளனாய்
காலமெல்லாம் பணி செய்தீர் ஐயா! உமைக்
காலன் கவர்ந்திட்ட செய்தி கேட்டுக்
கலங்கித் தவிக்கின்றோம்! எம கண்ணீர்ப் பூக்கள்
நும காலடியில் சேரட்டும்.

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய்க்
கல்விக் கோட்ட பிரதி/உதவிக் கல்விப்
பணிப்பாளர், அலுவலர்கள்,
அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்

மானிப்பாய்.
7-3-1995

[35566]

## இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலி

### திரு. இ. சிவானந்தன்
அவர்கள்
பிரதிக்கல்விப் பணிப்பாளர் யாழ்/வலயம் - 1

யாழ்ப்பாணத்தில் கல்விக் கோட்ட முறை முதல் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம் எமது கல்லூரியில் இயங்கி வந்த வேளையில் பெருந்தகை அவர்களின் சேவைகளை நாம் உணர்ந்துள்ளோம். ஆரம்ப ஆசிரியர்களின் கல்விக் கருத்தரங்குகளில் தாளத்துடனான அவரது போதனை எங்கள் உள்ளத்தில் என்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது அன்னாரது திடீர் மரணச் செய்தி எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது அவரின் இழப்பினால் துன்பக் கடலில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும், கல்வியுலகிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள், பழைய மாணவர்கள்,
சிற்றூழியர்கள்.

[35565]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 - 03 - 1910

மறைவு: 28 - 02 - 1993

### வீரகத்திப்பிள்ளை இரத்தினம்

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன்-
வளர்த்தீர்கள் அப்பா!
கார்த்திகைத் தீபமாக மறைந்து விட்டீர்களே-
அப்பா!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நஞ்சிகா வைத்தியசாலை
மானிப்பாய்.

[8367]

## கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் வலயம்-1
# முறைசாராக் கல்விப் பிரிவு

யாழ்ப்பாணம் வலயம் - 01 இல் பின்வரும் பாடசாலைகளில் இயங்கும் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் பாடசாலையை விட்டு விலகியோருக்கான தொழிற்றிறன் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயிற்சியை பெற விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உதவிக் கல்விப் பணிப்பாளர், முறைசாராக் கல்விப் பிரிவு, கல்வித்திணைக்களம் வலயம் - 1 என்ற முகவரிக்கு 15 - 03 - 1995 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பயிற்சி நடைபெற உத்தேசிக்கப்பட்ட பாடசாலை பயிற்சி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| கோட்டம் | பாடசாலை | பயிற்சி நெறி |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 1. யா/நாவலர் ம. வி. | படவரைஞர் |
| | 2. யா/மத்திய கல்லூரி | குளிரூட்டல் |
| | 3. யா/வைத்தீஸ்வராக் கல்லூரி | வானொலி பேணல்<br>மோட்டார் றீவைண்டிங் |
| 2. நல்லூர் | 4. யா/கனகரத்தினம் ம ம வி. | உடையமைத்தல்<br>மோட்டார்-பொறித் தொழில்<br>தமிழ் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் |
| | 5. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி | தமிழ் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் |
| | 6. யா/முத்துத்தம்பி ம. வி. | உடையமைத்தல் |
| 3. சாவகச்சேரி | 7. யா/கைதடி விக்கினேஸ்வரா | சமயற்கலை |
| | 8. யா/றிபேக் கல்லூரி | ஆங்கில சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்<br>உடையமைத்தல் |
| | 9. கொடிகாமம் திருநாவுக்கரசு | வீட்டு மின் இணைப்பு |
| 4 வேலணை | 10. யா/சேர். வைத்திலிங்கம் துரைசாமி | தமிழ் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்<br>புத்தகம்கட்டுதல் |

**கல்வித் தகைமைகள்**

1. ஆங்கில சுருக்கெழுத்தும், தட்டச்சும்:-
   ஆங்கிலம் சீ தரம் உட்பட க. பொ. த. சாதாரண சித்தி.
2. படவரைஞர் ஆங்கில மொழிமூலம்:-
   கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் சீ தரம் உட்பட க பொ. த சாதாரண சித்தி
3. வானொலி திருத்துதல்:-
   கணிதம், விஞ்ஞானம் உட்பட க. பொ த சாதாரண சித்தி.
4. தமிழ் தட்டச்சு:-
   தமிழ் சீ தரம் உட்பட க.பொ த சாதாரண சித்தி
5. ஏனைய பாடநெறிகள்;
   தரம் 8 சித்தி.

மேலதிக விவரம் தேவைப்படுமிடத்து மேற்குறித்த பாடசாலை அதிபருடன் அல்லது வலயம் - 1 முறைசாராக்கல்வி பகுதியிடம் தொடர்பு கொள்ளவும்.

கல்விப் பணிப்பாளர்,
கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.

(சி-727)

# முக்கிய அறிவித்தல்

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## கிளைக்குழுத் தேர்தல்

01-03-1995ஆம் திகதிய பத்திரிகையில் என்னால் கொடுக்கப்பட்ட விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதை அறியத்தருகின்றேன்.

1. 21-05-1994இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்வரும் கிளைகளுக்கான நியமனங்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

| கிளை இல. | பெயர்; |
|---|---|
| 1 | தெல்லிப்பழை |
| 14 | கொல்லங்கலட்டி |
| 26 | மயிலிட்டி வடக்கு |
| 29 | வீமன்காமம் |

2. மேற்குறிப்பிட்ட நான்கு கிளைகளிலும் 10-02-95, 11-02-95 ஆகிய திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசிலனையின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட 150 விண்ணப்பங்களை உரிய கிளைகளின் வாக்காளர் பட்டியலில் உள்ளடக்கி தற்போது காட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் இருந்து நியமனப் பத்திரங்கள் கையேற்கப்பட உள்ளன

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இடம்:
யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்,
உடுவில்வீதி,
மானிப்பாய்.

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:
**11 — 03— 95** சனிக்கிழமை

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம்:
காலை 9-00மணி — காலை 10 00 மணிவரை

ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்படும் நேரம்:
காலை 10-00மணி — காலை 11-00மணிவரை

தேர்தல் இருப்பின்
**18 - 03 - 95** சனிக்கிழமை காலை **9** மணி — பி. ப **4** மணி வரை நடைபெறும்.

இடம்:- யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்

குறிப்பு:
சங்கத் தலைமைக் காரியாலயத்திலும், பின்வரும் கிளைகளிலும் ஏற்கனவே காட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்களைப் பார்வையிட்டுக் கொள்ளலாம்.
அதே இடங்களில் புதிய நியமனப் பத்திரங்களையும் ரூபா 10/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| தேர்தல் கிளை. | காட்சிப்படுத்தும் கிளை. | |
|---|---|---|
| கி. இல.1 தெல்லிப்பழை | கி. இ. 11 கந்தரோடை | நிவா. கிளை |
| | கி. இ. 02 துர்க்கை அம்மன் கோயிலடி | நுகர். கிளை |
| கி. இ. 14 கொல்லங்கலட்டி. | கி. இ. 04 சித்தன்கேணி. | நிவா. கிளை |
| கி. இ. 26 மயிலிட்டி வடக்கு. | கி. இ. 15 தாவடி. | நிவா. கிளை |
| கி. இ. 29 வீமன்காமம் | கி. இ. 12 உடுவில் ஆலடி. | நிவா. கிளை |
| | கி. இ. 17 நீர்வேலி. | நிவா. கிளை. |

எ. சின்னத்தம்பி.
தேர்தல் உத்தியோகத்தர்

பிரதேச செயலகம்,
வலிவடக்கு.
தெல்லிப்பழை.
07 - 03 - 1995
தகந/-

[சி-732]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மகளிர் விடுதலை

இன்று அனைத்துலக மகளிர் நாளாகும். பெண்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட்டு, அவர்கள் சமத்துவத்துடன் வாழ்வதற்கு வகை செய்ய வேண்டும் என்பதனை வலியுறுத்தும் நாளாகும் இது.

குடும்பத்திலும், சமூகத்திலும், தேசத்திலும் பெண்கள் ஆண்களோடு சம உரிமைகளுடன் வாழ்வதற்கும், அவர்களின் சுதந்திரம் பேணப்படுவதற்குமான மாற்றம் தேவை என்ற போராட்டம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே துளிர்த்து விட்டது.

இருபதாம் நூற்றாண்டு மறைந்து போகும் இப்போதும், [illegible]ன்னமும் அது ஓயவில்லை. அபிவிருத்தி குன்றிய அல்லது மூன்றாம் உலக நாடுகளில் மட்டுமன்றி, பல துறைகளிலும், பல வகைகளிலும் வளர்ச்சி கண்டுவிட்ட மேற்கு நாடுகளிலும் கூட பெண்கள் இன்னும் முற்றாகச் சுதந்திரம் பெறவில்லை.

மகளிருக்குரிய அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படுவதும், அவர்களின் தனித்துவம் சிதைக்கப்படுவதும் உலகளாவிய ரீதியில் தொடரவே செய்கின்றன குடும்ப, சமூக மட்டங்களில் மட்டுமன்றி அரச மட்டத்திலும் பெண்களின் உரிமைகளை மறுக்கும் நிலை உண்டு என்பதனை சர்வதேச மன்னிப்புச் சபையின் 135 பக்க அறிக்கை மிக விவரமாக எடுத்துரைத்துள்ளது.

அரசியல் மற்றும் தொழில் ஆகிய பல துறைகளில் பெண்கள் முன்னணி வகித்தாலும், அவர்களது கௌரவம் மற்றும் சுதந்திரங்களை பாதிக்கும் விதத்தில் அவர்கள் குறைந்த தரத்தினராகவே கருதப்படும் நிலை இன்னும் ஒழியவில்லை.

தமிழீழத்தைப் பொறுத்தவரையில் பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னேறி, தமது திறமைகளைக் காட்டிச் சாதனைகள் புரிந்த போதிலும், பெண்களின் உரிமைகள் பெரிய அளவில் இன்னும் நிலை நாட்டப்படவில்லை.

பெண்களை சக்தியாகப் போற்றும் அதே வேளை, அவர்களை அடிமை நிலையில் வைத்துப் பார்க்கும் பாழ்பட்ட பண்பாடு இன்னும் சாகவில்லை!

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் விந்தை மனிதர் தலைகுனிந்தார் என்று பாரதியார் தமிழகத்தில் பாடிய பின்னரும், தமிழீழத்தில் பெண்கள் கிடுகு வேலிகளுக்குள் முடங்கிக் கிடக்கும் காலம் இருந்தது. ஆனால் இப்போது அந்த நிலை ஓரளவு மாறிவிட்டது.

விடுதலைப் போராட்டத்துடன் சமாந்தரமாக நிகழ்ந்த பல முன்னேற்றகரமான சமூக மாற்றங்களில், பெண்கள் முன்னணிக்கு வந்ததும் ஒன்றாகும். போர் முனையில் நின்று எதிரிப் படைகளை வீழ்த்தி வெற்றிகாணும் அளவுக்கு தமிழீழப் பெண்கள் எத்தனையோ படி உயர்ந்து நிற்கிறார்கள். உலகமே வியந்து பார்க்கும் வகையில் அவர்களின் சாதனை ஒப்பற்றதாகவும், முன்னோடியாகவும் விளங்குகிறது.

இத்தகு வீரசாதனை இந்த மண்ணில் நிகழ்கிறது என்பதால், குடும்பங்களில், சமூகத்தில் பெண்கள் சரிநிகர் சமானமாக வாழும் நிலை எய்தப்பட்டு விட்டதாகக் கொள்ள முடியாது.

அவர்களுக்கு எதிரான மறைமுக ஒடுக்குமுறைகளும், பல விடயங்களில் இரண்டாம் தரத்தினராகப் பார்க்கப்படும் தன்மையும் இன்னும் நீங்கவில்லை. அவர்களது பொருளாதாரம், பாதுகாப்பு என்பனவற்றுக்கு தனித்துவமும், சுதந்திரமும் இன்னும் முழுமையாகக் கிடைக்கவில்லை.

மேற்சொன்ன இரண்டு துறைகளிலும் அவர்கள் ஆண்களில் தங்கி அல்லது அவர்களைச் சார்ந்து நிற்க வேண்டிய நிலை தொடர்கிறது. இந்த நிலை நீங்குவதற்கு ஆண்களிடம் உணர்வு பூர்வமான மனமாற்றம் தேவை.

இனிமேலும் ஆணாதிக்கம் வலுப்பெற முடியாது; புதிய உலகப் போக்குகளும், எல்லோருக்கும் உரிமைகள், எல்லோருக்கும் சுதந்திரம் என்ற கருத்தும், செயலும் வாழ்வின் அங்கங்களாகி வருகின்றன.

இதனைப் புரிந்தும், உணர்ந்தும் தமிழீழ பெண்களின் விடுதலைக்கு [illegible]ங்கள் உதவ வேண்டும்.

# தமிழீழப் பெண்கள் பெறுகின்ற விடுதலை
# உலகம் போற்றும் அளவுக்கு வேண்டும்

*அனைத்துலக பெண்கள் நாளையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது*

ஆரம்பத்தில் உலகளாவிய அளவில் பெண்களுக்குச் சொத்துரிமை மறுப்பு உழைக்கும் பெண்களுக்கான ஊதியத்தில் வேறுபாடு, வேலைப் பளு, கல்வியில் புறக்கணிப்பு, அரசியல் உரிமைகள் மறுப்பு போன்ற பல்வேறு உரிமை மறுப்புகள் பெண்கள் மீது பிரயோகிக்கப்பட்டன.

இந் நிலையை எதிர்த்து பெண்கள் அரசியல் சமூக, பொருளாதார சமத்துவத்துக்காகப் போராடுவதை இலக்காகக் கொண்டு 18ஆம் நூற்றாண்டின் பின் பல பெண்கள் அமைப்புகள் தோற்றம் பெற்றன.

### நியூயோர்க்கில் நடந்த போராட்டம்

மேலை நாட்டவர்களான புளோராடிரைஸ்ரன், மாட்டின்ஸ் குவர்ட், கிளாரா செட்கின் போன்றவர்கள் பெண் ஒடுக்கு முறைக்கு எதிராக போராடியதில் முதன்மையானவர்கள்.

1857 இல் மார்ச் 8 ஆம் நாள் நியூயோர்க் நகர நெசவுப் பெண்கள் அணிதிரண்டு தொழிற்சங்க ரீதியாக உரிமைப் போரில் குதித்த நாள்.

இந் நாளை நினைவு கூரும் முகமாகவும் 1910 ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டின் கோபன் ஹேகன் நகரில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலக சோஷலிஸ்ட் பெண்கள் மாநாட்டில் கிளாரா செட்கின் அம்மையார் வெளிப்படுத்திய கருத்துக்கமைய மார்ச் 8ஆம் நாளை அனைத்துலகப் பெண்கள் நாளாகக் கொண்டாடுவதென முடிவெடுக்கப்பட்டு, 1911 ஆம் ஆண்டில் இருந்து அமைதி, சமத்துவம், சனநாயகம் என்பவற்றிற்காகப் போராடப் பெண்களை அணிதிரட்டும் எழுச்சி நாளாக அனைத்துலகப் பெண்கள் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

### குடும்பப் பளுவும் வேலைப் பளுவும்

எமது தமிழீழச் சமூக அமைப்பை எடுத்துக்கொண்டாலும் ஆண் தான் பெரும்பாலும் குடும்பத்துக்கான பொருளாதார வலுவைச் சேர்ப்பவனாகவும் குடும்பத்தின் பாதுகாவலனாகவும் கருதப்படுகிறான்.

பெண் குடும்பப்பொறுப்பை ஏற்றுச் (பிள்ளைகளைப் பெற்றெடுத்துப் பராமரித்தல், சமையல் வேலைகள், வீட்டின் ஏனைய வேலைகள்) செய்பவளாக கருதப்படுகிறாள்.

இந்த இரண்டு செயற்பாடுகளும் குடும்பத்திற்கோ, அல்லது சமுதாயத்திற்கோ அத்தியாவசியமானவை என்பதை எல்லோரும் புரிந்து கொண்டாலும் இச்செயற்பாடுகளுக்கிடையே உயர்வு தாழ்வுகள் பார்க்கப்படுவதால் ஒன்றையொன்று மதித்து கௌரவம் அளிக்காத தன்மைகளால் சமுதாயத்தில் சிக்கல்கள் தோன்றுகின்றன.

பெண்களை மதிக்காத தன்மை, அவர்கள் உரிமைகளுக்கு உரிய கௌரவம் கொடுக்காத தன்மை எழுகின்றது. பெண்களில் குறிப்பிடக்கூடியவர்கள் வெளியில் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தாலும் வீட்டுவேலைப் பளுவில் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் பங்கெடுத்துச்செய்யாமல் தனித்து பெண்ணின் மீதே சுமத்தப்படுகின்றது.

இதனால் பெண் உடல், உளரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றாள். இதை விடுத்து குடும்பத்தில் வேலைகள் எல்லோருக்கும் பொதுவானவை என்பதை உணர்ந்து பங்கெடுத்துச் செல்வதனூடாக பெண்களின் வேலைப் பளுவைக் குறைக்கலாம்.

இதனூடாக அவளது சிந்தனைகள், செயற்திறன்களை சமுதாயப் பணிகளில் ஈடுபடுத்துவதனூடாக அவளது திறன்கள், ஆற்றல்கள் நாட்டுக்குப் பயன்பட வழி ஏற்படுகின்றது.

### பெண் விடுதலை

எமது சமுதாயத்தைப் பொறுத்த வரை பெண் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வரையறைக்குள் நிறுத்தப்படுகின்றாள். அதைமீறி அவள் வெளியே வந்தால் சமுதாயச் சீரழிவுகள் ஏற்படும் குடும்ப கௌரவம் காற்றில் பறக்கும் என்று கட்டுப்பாடுகளை விதித்து பயமுறுத்தப்படுகின்றாள்.

இப்படி கூறப்படுகையிலே அந்நிய பண்பாடு போல எமது பண்பாடு, ஆகிவிடுமோ என்று அங்கலாய்ப்பவர்களும் உண்டு. சீரழிவு என்று கூறுகையில் ஆண், பெண் இருவரும் இணைந்து தான் சீரழிவை ஏற்படுத்த முடியும். இதில் தனித்து ஒருவரில் (பெண்ணில்) குற்றம் சுமத்திப் பயனில்லை. தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை மேம்பாடு செய்யும் வகையில் பெண் விடுதலை முன்னெடுக்கப்பட வேண்டும். இதில் பயப்பட்டு அங்கலாய்ப்பதற்கு ஒன்றுமே இல்லை.

பெண் தன்னுடைய ஆற்றல்கள் ஆளுமைகள், வீரதீரங்கள், திறமைகள் அனைத்தையும் வெளிக்கொணர மூட நம்பிக்கைகள், தேவையற்ற பண்பாட்டு இறுக்கங்கள் தடைக்கற்களாக உள்ளன. இவற்றைத்தான் நாம் காலத்துக்கும், தேவைக்கும் ஏற்ற வகையிலே உடைத்தெறிய வேண்டும் என்கிறோம்.

### தன்னைத்தானே பாதுகாக்க வேண்டும்

பெண் தன்னைத் தானே பாதுகாத்து வாழ்பவளாக எமது சமுதாயத்தால் வளர்க்கப்படுவதில்லை. பிறரைச் சார்ந்து (தந்தை, கணவன், மகன், சகோதரன்) வாழ்பவளாக வளர்க்கப்படுகிறாள். இப்படியே தங்கி அல்லது சார்ந்து வாழப்பழகிக் கொண்ட அவள் சந்தர்ப்ப சூழ்நிலையினால் தனித்து விடப்படுகையிலே அவளது வாழ்க்கை கேள்விக்குறியாகின்றது. இதை மாற்றி பெண் தன்னைத் தானே பாதுகாத்து வாழக்கூடியவளாக சமுதாயம் அவளை வளர்க்க வேண்டும்.

### தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்

பெண்ணை இழிவுபடுத்தும் சொற்றொடர்கள், பழமொழிகள், எமது அகராதியில் இருந்து தூக்கி எறியப்பட்டு எரியூட்டப்பட வேண்டியவை.

தமிழ்ப்பெண்களுடைய விடுதலை வித்தியாசமானது என உலகம் போற்றக்கூடிய அளவிற்கு எமது பெண்விடுதலை அமைய வேண்டும்.

★ பெண்கள் தங்களுடைய கௌரவங்கள், உரிமைகள், சுதந்திரங்கள் என்பவற்றுக்காக தாங்களே போராடி உரிமைகளை நிலைநாட்ட வேண்டும்.

★ அவளுடைய ஆளுமைகள், ஆற்றல்கள், திறமைகள், வீரதீரங்கள் சுதந்திரமாக வெளிக்கொணரப்பட வேண்டும். அவை நாட்டிற்கு பயன்பட வேண்டும்.

★ பெண் பொருளாதார அடிப்படையிலும் பாதுகாப்பின் அடிப்படையிலும் ஆணைச் சார்ந்து வாழாது தனித்துவமாக வாழ வளர்க்கப்பட வேண்டும்.

இதுவே பெண்களின் சுதந்திரத்திற்கும், தனித்துவத்திற்கும் அடிப்படையாக அமைகிறது.

தமிழீழத் தேசியத் தலைவருடைய கூற்றின்படி: "பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில் அவர்களது சமூக பொருளாதார வாழ்வு மேம்படுவது அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆயினும் அதேவேளை ஆண் - பெண் உறவிலும் அந்த மானசீக உலகிலும் மாற்றங்கள் தேவை. உண்மை சமத்துவம் என்பது ஆண் - பெண் உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில் தான் சாத்தியமாகிறது" என்பதை ஒருமுறை நினைவுபடுத்துவோம். (இ)

# தமிழர் அவலங்களை முழுமையாக அறிய
# ஆக்கிரமிப்பு பகுதிகளுக்கு செல்லுங்கள்!

## மேற்கு நாட்டுத் தூதுவர்களுக்கு மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 8

இங்கு வந்துள்ள நீங்கள் யாழ்ப்பாண நகரையும் குடாநாட்டின் ஒரு பகுதியையும் மட்டுமே பார்த்துணர முடியும்.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள, கட்டுப்பாட்டில் உள்ள எங்கள் பிரதேசங்களையும் சென்று பார்த்தாலே, எமது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளையும் அவலங்களையும், அழிவுகளையும் முழுமையாக உணர முடியும்.

நேற்று இங்கு வந்துசேர்ந்த மேற்கு நாடுகளின் தூதுவர்களுக்கு கையளிக்கப்பட்ட மகஜர் ஒன்றில் இவ்வாறு கோரப்பட்டது.

இந்த மகஜரை திரு. நாக. பத்மநாதன், கொழும்பிலிருந்து வந்த மேற்கு நாட்டுத் தூதுவர்கள் பன்னிரெண்டு பேரிடமும் நேரில் கையளித்தார்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, யப்பான், கனடா, அவுஸ்திரேலியா, சுவிஸர்லாந்து, நோர்வே, பின்லாந்து, சுவீடன், நெதர்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளாகிய உங்களுக்கு இங்கு வருகை தந்தமைக்காக தமிழ்மக்கள் தமது நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

எனினும் இத்துடன் ஓர் ஏக்கமும் குடிகொள்கிறது.

இங்கு வருகை தருவோர், யாழ்ப்பாண நகரையும் குடாநாட்டின் ஒரு பகுதியையும் மட்டுமே பார்த்துணர முடிகிறது. பலாலி, மயிலிட்டி காங்கேசன் துறை, மாதகல் கீரிமலை, ஆனையிறவுப் பிரதேசங்களையோ, அச்சுவேலி, தெல்லிப்பளை அளவெட்டி, பண்டத்தரிப்பின் முழு வடிவத்தையோ, ஊர்காவற்றுறை, காரைநகர், புங்குடுதீவு, வேலணை முதலிய ஏழு தீவகங்களின் அவலத்தையோ எவரும் பார்த்தறிய முடியாதபடி அங்கு அரச படையின் ஆக்கிரமிப்பு மறைத்து நிற்கிறது.

அங்கு தொன்றுதொட்டு வாழ்ந்த மக்களில் கணிசமான பகுதியினர் எல்லா இழப்புக்களையும் ஏற்ற நிலையில் தம் சொந்த நாட்டிலேயே அகதிகளாய் வாழும் கொடுமையே நிலவுகிறது. இவர்களது வளங்கள் பாழ்[illegible]டுத்தப்பட்டு, பல உயிர்கள் [illegible]கொள்ளப்பட்டு எஞ்சியோர் இடம்பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

இவர்களது வீடுகள் உடைத்துப் பொருள்கள் களவாடப்பட்டது மட்டுமல்லாது இந்த இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் பல இடங்களில் வீடுகள் "புல்டோசர்" கொண்டு இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டு இவற்றின் எல்லைச் சுவர்களும் வேலிகளும் கூட முற்றாக அழிக்கப்பட்டு அடையாளம் தெரியாத மணற் பிரதேசமாக ஆக்கப்பட்டுக் கிடக்கின்றன.

திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களின் நிலை இன்னும் மோசமாகும். இவற்றையும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உற்றுணர வேண்டுகிறோம்.

சிங்களப் பகுதியின் காலியையோ களுத்துறையையோ தமிழ் மக்கள் போய்த் தாக்கவில்லை. தம் சொந்த மண்ணையும் அதன் சுபிட்சத்தையும் இறைமையையும் வேண்டியே ஈழத் தமிழினம் போராடி நிற்கிறது. ஆக்கிரமிப்பு எண்ணமும் அதற்கில்லை. அடிமைப்படும் எண்ணமும் இல்லை. இந்த சுதந்திர சுபீட்ச நிலைக்கு வெளிநாடுகள் தம் பங்களிப்பைச் செய்ய வேண்டுகிறோம் — என்று உள்ளது.

## முன்னாள் அரச அதிபருக்கு கொலைப் பயமுறுத்தல்

### மட்டக்களப்பில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 8

மட்டக்களப்பைச் சேர்ந்த, முன்னாள் அரச அதிபர் ஒருவருக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில், சனசந்தடி மிக்க வீதியில் அமைந்துள்ள தனது வீட்டிலிருந்து புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்த வேளை— இரவு 11-20 மணியளவில் இந்த முன்னாள் அரச அதிபரின் வீட்டினுள் புகுந்த இனங்கானப்படாத சிலர், இவரது 'சுசுக்கி' காரின், கண்ணாடிகளை அடித்து நொருக்கியதுடன், கொலைப் பயமுறுத்தல் கடிதம் ஒன்றையும் விட்டுச் சென்றுள்ளனர்.

சிறிது நேரத்தில் வெளியே வந்து பார்த்த போது வீட்டு முற்றத்தில் கத்தி ஒன்றும், இது "முதலாவது எச்சரிக்கை; அடுத்தது 'கொலை' என்ற வாசகங்கள் அடங்கிய கடிதமும் கண்டெடுக்கப்பட்டது.

இதுதொடர்பாக மட்டக்களப்பு பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து. இவரின் வீட்டிற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ([illegible]-5)

## நாற்றங்களை விலக்கிடுவாயா?

ஈழத்து மண்ணுக்கு விடுதலை ......?
ஆக்கிரமிக்க நிற்கும் அத்தனை பேரையும்,
விரட்டிட மட்டு மல்ல!
மண்ணின்!!
தளையறுகின்ற போதி லென்றாலும்,
தமிழனும் தமிழிச்சியும்,
சரி நிகர் சமான மாக,
வாழ்ந்திட வேண்டும்!
அதற்காகத்தான்; இங்கே!
மண்ணின் விடுதலைக் காய்
கான மிசைத்துக் கொண்டே,
மங்கையரின் விடுதலைக்காயும்,
களத்தினர் கான மிசைக்கின்றனர்.
மிதி வண்டியோடு "சாலி" யும்
ஓட்டியவுடன் விடுதலை யென்[illegible]!
அலுவலகங்களில் ஆற்[illegible]ம் பணிகளால்,
அணங்கினர்க்கு விடுதலை யென்பதோ!
கவியரசன் சொன்ன நிமிர் நடையோடு,
நேர் கொண்டு நின்றவுடன் விடுதலையோ!
இலட்சங்களும் அணிமணிகளும்,
இல்லையென்பதால் இம் மண்ணில்,
கன்னியராக இருக்கிறார்களே,
ஆனாலும் தமிழ்ச் சமுதாயமோ
ஆணினத்தைத் தவிர்த்து விட்டு
பெண்ணினத்தை நோக்கியே,
வீசும் கணைகள் கொஞ்ச மல்ல!
மார்ச் எட்டே! மங்கையரின்,
மனத் துயரை மட்டும் விளம்பிடாதே
செயல் எனும் கருவி கொண்டு
சேர்ந்து நிற்கும் களத்தினரோடு
சமூக நாற்றங்களை விலக்கிடுவாயா?
நங்கையர் தாம் ஏற்ற முற
நீயும் நிலத்தில் செயற்படுவாயா?

— மீசாலையூர் கமலா

## நரோமா வந்து திரும்பியது

வடமராட்சி, மார்ச். 8

நேற்று பருத்தித்துறைக்கு வந்த "நரோமா" கப்பலில் 49 பயணிகள் திருமலையிலிருந்து வந்தனர். 149 பயணிகள் நேற்று இங்கிருந்து இக் கப்பல் மூலம் திருமலைக்குப் புறப்பட்டுச் சென்றனர். (உ-173)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச். 8

தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தின் யாழ் வட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன் பிற்பகல் 3.00 மணிக்கு அத்தியடி ஆயுள்வேத கல்லூரியில் நடை பெறவுள்ளது. (ஒ)

## பாக். அணியின் தலைவர் இடைநிறுத்தம்

இஸ்லாமாபாத், மார்ச். 8

பாகிஸ்தான் கிரிக்கெட் டெஸ்ட் அணியின் தலைவர் சலீம் மாலிக்கை கிரிக்கெட் அணியிலிருந்து ஒரு வாரத்துக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை இடை நிறுத்தியிருக்கிறது.

பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடிய வெளிநாட்டு டெஸ்ட் அணிகளின் வீரர்களுக்கு லஞ்சம் வழங்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக அவருக்கு எதிராக விசாரணை நடத்த இருப்பதை ஒட்டியே அவர் இடை நிறுத்தப்பட்டிருக்கிறார். [உ-3]

## மகளிர் தின நிகழ்வுகள்

வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள சர்வதேச மகளிர் தினவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை சத்துணவுக்கூட மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி தலைமையில் இவ்விழா நடைபெறும். [உ-173]

★ ★ ★

கொக்குவில் வளர்மதி முன்னேற்றச் [illegible] நிலையமும் நடத்தும் மகளிர் [illegible] 5-30 மணி முதல் வேலாயுத பிள்ளை அரங்கில் வளர்மதி முன்னேற்றக் கழக மகளிர் பிரிவுத் தலைவி திருமதி சோ. ஈஸ்வரபவானி தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

அனைத்துலக மகளிர் தினத்தை ஒட்டி மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் வலைப்பந்தாட்ட, கூடைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணி முதல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளில் நடைபெறும். அருட்சகோதரி மேரி ஜோலண்ட் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## உலக வங்கி அதிகாரிகள் கொழும்பு வருகின்றனர்

அரசாங்கத்தின் தனியார் மயப்படுத்தும் கொள்கையை அமுல் நடத்துவதற்காக உலக வங்கியைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் அடுத்த வாரம் கொழும்பு வந்து சேர விருக்கின்றனர்.

பொதுச்சொத்துகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவரும் இலங்கை வங்கியின் தலைவருமான ராஜன் ஆசீர்வாதம் இத்தகவலை வெளியிட்டார்.

சாத்தியமான அளவுபெரும்பாலான அரசநிறுவனங்களில் உள்ள தனது பங்குகளை கொழும்பு பங்குச் சந்தையில் அரசு விற்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் இந்த ஆண்டில் ஆயிரத்து 300 கோடி ரூபாவை அரசு பெறும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (இ-எ)

## கொழும்புத் துறைமுகத்தில் கப்பல்களில் கொள்ளை

### இரவு நேரத்தில் நடக்கிறது

கொழும்பு, மார்ச் 8

கொழும்புதுறைமுகத்தின் நடுக்கடலில் நங்கூரமிட்டுள்ள கப்பல்களை குறிவைத்து கயிற்றின் உதவியுடன் அக் கப்பல்களில் ஏறி அங்கு 'சீல்' வைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் உள்ள பெறுமதி மிக்க பொருள்களை கொள்ளை அடிப்பதில், கடந்த பல மாதங்களாக சில கோஷ்டியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இக் கொள்ளைக் கோஷ்டியினர் இரவு வேளைகளில், உயர் சக்தி வாய்ந்த கண்ணாடி இழைப் படகுகளில் வந்தே கொள்ளைகளில் ஈடுபடுகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட வத்தளை வாசி ஒருவரிடமிருந்து, பெறுமதி மிக்க ஆடம்பரப் பொருள்களை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். தொலைக்காட்சி பெட்டிகள், வக்கியூம் கிளீனர் என்பனவும் கைப்பற்றப்பட்ட பொருள்களில் அடங்கும்.

இது தவிர கொழும்பின் சுற்று வட்டப் பகுதிகளிலுள்ள பல சில்லறைக் கடைகளில் தேடுதல்களை நடத்திய துறைமுகப் பொலீஸார் அக் கடைகளில் இருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை மீட்டுள்ளனர். (ஐ-5)

### பிரபாவின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டிருந்தார்.

இப்பதில் கடிதத்தைப் பார்த்ததும் சந்திரிகா அதிர்ச்சியுற்றார் என்று தெரியவந்ததாக "சண்டே ரைம்ஸ்" அரசியல் செய்தியாளர் தெரிவித்திருக்கிறார். (இ-எ)

### நீர் அருந்து ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் ஜோர்ஜ் ஆர்னியும் அவரது உதவியாளரும் நேற்று உண்ணாவிரதிகளைச் சென்று பார்வையிட்டு அவர்களின் நிலைமையை கேட்டறிந்தனர். (ஓ-7-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லையா சின்னப்பிள்ளை

திருமதி செல்லையா சின்னப்பிள்ளை 7 – 3 – 1995 இல் காலமானார். இவர் திரு சின்னப்பொடி செல்லையாவின் அன்பு மனைவியும், திரு திருமதி சுப்பர், செல்வியின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற திருமதி மாணிக்கம் இலச்சுமியின் அன்புச் சகோதரியும், திருமதி ஜோசப் யோகேஸ்வரி (பிரான்ஸ்-முன்னாள் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), செ. வினாயகமூர்த்தி [வீரசிங்கம்], திருமதி குணராஜா மகேஸ்வரி (ஆசிரியை- யாழ்/ இந்துமகாவித்தியாலயம், சண்டிலிப்பாய்), திருமதி இரவீந்திரன் பரமேஸ்வரி, திரு செ. விக்கினேஸ்வரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு கா. ஜோசப் (பிரான்ஸ்), திருமதி வி. கலிஸ்ரா, திரு பா. குணராஜா [தமிழீழ நிர்வாக சேவை யாழ்ப்பாணம்], திரு இ. இரவீந்திரன், திருமதி வி இராஜேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜோ. ஜெனிதன், ஜோ. ரொசான் (பிரான்ஸ்), கு. தமிழினி [உடுவில் மகளிர் கல்லூரி], கு. பிரிந்தாபன் அவர்களின் அருமைப் பேத்தியாரும், காலஞ்சென்ற திருமதி ஐ. செல்வராணி, செ. மகாலிங்கம், செ சிவராஜா, திருமதி சி. புஸ்பராணி, செ. யோகராணி, செ. சிறீதரன், ஆகியோரின் பெரிய தாயாரும், திருமதி வ. நேசமணி, காலஞ்சென்ற திருமதி சின்னத்துரையின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக அவரது இல்லத்திலிருந்து இன்று (8 - 03 – 95) புதன் காலை 10-00 மணிக்கு, பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. விநாயகமூர்த்தி
[மகன்]

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய் [35568]

## வைத்திலிங்கம் இராசையா

நாரந்தனையை பிறப்பிடமாகவும், கரம்பன் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பதெனிய பிரபல வர்த்தகர் வயித்திலிங்கம் இராசையா 5 ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வயித்திலிங்கம் தங்கமுத்துவின் அன்பு மகனும், நாகமுத்து பொன்னுமுத்துவின் மருமகனும், குசுமணியின் (ருபா) அன்புக்கணவரும், மகிந்தன், மஞ்சுளாதேவி, மகேந்திரன், காலஞ்சென்ற மனோகரன், மற்றும் மதிதேவி, மதியழகன் [போரானி], ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குமாரசிங்கம் மற்றும் கண்ணுத்துரை, காலம் சென்றவர்களான மரகதம், முதலித்தம்பி, சிவமணி ஆகியோரின் சகோதரரும், ஜெகதீஸ்வரன், வாசுகியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
முதலித்தம்பி பரமேஸ்வரி
[சகோதரரின் மனைவி]

[35578]

## முத்தையா தர்மராஜா

[ஓய்வு பெற்ற தபால் அதிபர், தாவடி இ.த.க பாடசாலை ஆங்கில ஆசிரியர்]

கோண்டாவிலை பிறப்பிடமாகக் கொண்டவரும், தாவடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான முத்தையா தர்மராஜா நேற்றுக் காலமானார்

இவர் மீனலோஜினியின் அன்புக் கணவரும், குலதர்மா (பாபு), குணதர்மா (கோபு – சவுதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரட்ணமலர் திருவினங்கம், பரிபூரணம் கட்டையா (லண்டன்), தனலஷ்மி, சண்முகராஜா (கனடா), அருந்ததி பராராஜசிங்கம் சந்திரசேகரா (ஓய்வு பெற்ற நீர்ப்பாசனப் பொறியியலாளர்), காலஞ்சென்ற ராஜசிங்கம், புனிதவதி வேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆ சுப்பிரமணியம் தம்பதிகளின் மருமகனும், தவமணிதேவி சாம்பசிவம் (ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி), தவரட்ணசிங்கம், ஜெயராஜசிங்கம், திஷாந்தி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பாடசாலை வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று 8.3 95 பிற்பகல் 2 மணிக்கு தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. சந்திரசேகரா
[சகோதரர்]

பாடசாலை வீதி,
தாவடி [35581]

## திருமதி சரவணபவன் விநாயகவிசாலாட்சி

சந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிறவுண் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி சரவணபவன் விநாயகவிசாலாட்சி நேற்று சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ் சென்ற இ. சரவணபவனின் [முன்னாள் சீமெந்துக் கூட்டுத்தாபன இரசாயனப் பொறியியலாளர்] அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசையா – செல்லம்மா தம்பதிகளின் அன்புமகளும், சுரேந்திரநாதன், விஷ்ணு இராஜேந்திரா, பொன்னம்மா, காலஞ்சென்றவர்களான விசுவநாதன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சற்குணநாயகி, உமாசுதன் (ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி), சசிகலா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8- 3- 95) புதன்கிழமை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ச. உமாசுதன்
(மகன்)

232, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம் (35579)



கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த மேற்குலக ராஜதந்திரிகள் வள்ளத்தில் இறங்குதுறையில வந்திறங்கும் போது எடுக்கப்பட்ட படம் [ஞ]

# அரசின் கடிதம் எதுவும் புலிகளுக்கு வரவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கு—கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான செயலணிக் குழுவில் இடம்பெறும் பிரதிநிதிகள் பெயர் விவரங்களை அனுப்புமாறு கோரி அரசிடம் இருந்து எந்தவித கடிதமும் எமக்கு கிடைக்கவில்லை.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்தன.

செயலணிக் குழுவுக்கான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பெயர் விவரங்களை 48 மணித்தியாலங்களுக்குள் அனுப்புமாறு கோரி விடுதலைப் புலிகளுக்கு கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அனுப்பியுள்ளதாக அரசு அறிவித்திருந்தது.

ஆனால் -

நேற்று மாலைவரை தமக்கு இது தொடர்பாக கடிதம் எதுவும் கிடைக்கவில்லை என்றும—

அப்படி வந்தாலும் 48 மணித்தியாலங்களுக்குள் பெயர் விவரங்கள் குறித்து எவ்வாறு முடிவு செய்து அனுப்ப முடியும் என்றும்—விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் கேட்டன. (அ-3)

## கடற்புலிகள் ஐவர் கைது?

கொழும்பு, மார்ச். 8

கற்பிட்டிக்கு வடக்கே 15 கிலோ மீற்றர் தூரத்தில் 5 கடற்புலிகளை பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் நேற்று முன்தினம் கைது செய்தனர் என்று "லங்கா புவத்" தெரிவித்துள்ளது. (இ)

## யுத்த கைதிகளின் உறவினர்கள் யாழ். வர முயற்சி

கொழும்பு, மார்ச். 8

தற்போது யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருந்து வரும் யுத்தக் கைதிகளின் பெற்றோர் தமது பிள்ளைகளின் நிலையை நேரில் கண்டறிவதற்காக விரைவில் யாழ்ப்பாணம் செல்ல இருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன

யாழ் செல்வதற்கான ஒழுங்குகளைச் செய்து தருமாறு அவர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவுக்கு கடிதம ஒன்றை அனுப்பியுள்ளனர்.

[ஒ-6]

# கப்பலிலிருந்து தபால் நேற்று இறக்கப்படவில்லை

வடமராட்சி, மார்ச் 8

பருத்தித்துறை துறைமுகத்துக்கு "குமண" கப்பல் நேற்று வந்தபோதிலும் அதில் எடுத்து வரப்பட்ட தபாற்பொதிகள் இறக்கப்படவில்லை

மேற்பாகத்தில் இருந்த டீசல் மற்றும் சில பொருள்களை இறக்கிவிட்டு அது காங்கேசன்துறை திரும்பியது.

தபாற் பொதிகளை எடுத்து வருவதற்கென இங்கு வந்த பிரதம தபாலதிபர் திரு கோடீஸ்வரனும் அவரது உதவியாளர்களும் வெறுங்கையுடன் திரும்பினர்.

அதன் காரணமாக எதிர் பார்க்கப்பட்டதுபோல வெளியூர் தபால் விநியோகம் நடைபெறமாட்டாது.

'லங்கா முடிதா' கப்பலில் இருந்து அனேகமாக வெள்ளி, சனிக்கிழமைகளிலேயே பொருள்கள் இறக்கி முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தக் கப்பல் திரும்பிய பின்னரே "குமண" இங்கு வரும் என்று துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ–173)

## கராத்தே கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கராத்தே பயிற்றுநர்களையும் ஒருங்கிணைத்து, "யாழ் மாவட்ட கராத்தே சங்கம்" ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளமை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இம்மாதம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு; கோண்டாவில், மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல கராத்தே பயிலுனர்களையும் கலந்து கொள்ளும்படி, யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது. (இ–5)

## உணவு முத்திரை விநியோகம்

தென்மராட்சி, மார்ச் 8

தென்மராட்சிப் பிரதேசத்தில் வசிக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கு 22ஏ, 22 பி, 23ஏ, இலக்கப்புள்ளிகளுக்கான உணவு முத்திரைகள் அந்தந்தப்பிரிவு கிராம அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

இம முத்திரைகளுக்கான உணவுப் பொருள்களை இம்மாதம் பதினைந்தாம் திகதிக்கு முன்னர் அந்தந்தப் பிரிவு ப.நோ.கூ.ச கிளைகளில் பெற்றுக்கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

[ தெ–117 ]

## ஐம்பது..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதல் தடவையாக இங்கு வந்துள்ளேன். இங்குள்ள மக்களின் கஷ்டமான வாழ்க்கை நிலையை நான் காணக்கூடியதாக இருக்கிறது" — இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

[உ-3]

## கருவீர்களா?

யூனி ஸ்வாசல் கலவிநிலையத்திற்கும் சுடுகாட்டு ஆலடிக்கும் இடையில் செல்லும்போது (அரசடி வீதியூடாக) 28-02-95ல் தங்க கைச்சங்கிலி ஒன்று தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுவீர்களென எதிர் பார்க்கிறேன்.

திரு. எம்.பி அருளானந்தம்
120/4 திருவள்ளுவர்சாலை
அரசடி [illegible]
சந்தர்[illegible]
(35577)

## புனரமைப்புக்கான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தெரிவித்த விடயங்களின் சாராம்சம் வருமாறு:-

★ மந்த நிலையில் உள்ள பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாவதற்கு புலிகள் இடையூறாக இல்லை பேச்சு நடக்க அரச தரப்புப் பிரதிநிதிகள் இங்கு வரலாம்.

பேச்சுக்கு புலிகள் நிபந்தனை ஏதும் விதிக்கவில்லை ஆனால் புலிகள் நிபந்தனை போடுவதாக அரசு பிரசாரம் செய்கிறது

★ வடக்கு, கிழக்கில் பெரியளவில் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்; பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்பட வேண்டும்; போக்குவரத்துப்பாதை ஒன்று திறக்கப்பட வேண்டும்; தற்போது அமுலில் உள்ள மோதல் தவிர்ப்பு நிலை, நிரந்தர — முறைமையான போர் நிறுத்தமாக மாற்றப்பட அரசு உருப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ யாழ் மாவட்டத்துக்கு மின்சாரம் வழங்க குறைந்தது 90 பெரிய ஜெனரேட்டர்களும், மாதாந்தம் 12 ஆயிரம் பரல் டீஸலும தேவை.

அரசு இரண்டு சிறிய ஜெனரேட்டர்களையே அனுப்பியிருக்கிறது அதற்கும் டீஸல் அனுப்பவில்லை எரிபொருள் எடுத்து வருவதற்கான தடையும் நீடிக்கிறது.

★ புனர்நிர்மாணப் பணிகளுக்கான பாரிய இயந்திரங்களை எடுத்துவர பாதை ஒன்று திறக்கப்படுதல் அவசியம்.

★ மோதல் தவிர்ப்பு உடன்பாடு திருப்திகரமாக கடைப்பிடிக்கப் படவில்லை. [illegible]

★ யுத்தநிறுத்தம் கொண்டு வரவும், யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுக்கள் செயற்படவும் அரசு தடையாக உள்ளது.

★ வடக்கு-கிழக்கு புனர்நிர்மாணத்துக்கு என பெருமளவு நிதியை வெளிநாடுகள் வழங்குகின்றபோது அவை சீரான முறையில் செலவிடப்பட வேண்டும்; அந்நிதியும் அதன் பயன்பாடும் மக்களைச் சென்றடைய வேண்டும்

இதற்காக விடுதலைப் புலிகளும் அரசுப் பிரதிநிதிகளும் அங்கம்வகிக்கும் அபிவிருத்தி அதிகாரசபை ஒன்று அமைக்கப்பட வேண்டும்; அதன் தலைமை அலுவலகம் வடக்கில் செயற்படவேண்டும்.

புனரமைப்பு, அபிவிருத்திக்கு என வெளிநாடுகள் வழங்கும் நிதியைக் கையாளுவதற்கு வடக்கு – கிழக்கு அபிவிருத்தி வங்கி திறக்கப்பட்டு, அந்நிதி அந்த வங்கியில் வைப்பிடப்பட வேண்டும்.

அரசிடம் இந்நிதி வழங்கப்பட்டால் அந்த நிதியை அரசு வேறு தேவைகளுக்கு பயன்படுத்திவிடும்.

★ போரினால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து தமிழர் பிரதேசத்தைக் கட்டி எழுப்ப மேற்கு நாடுகள் தாராளமாக உதவ வேண்டும். இந்த உதவிகள் நேரடியாக தமிழ்ப் பகுதிகளுக்குக் கிடைப்பதை அரசு தடுக்கக் கூடும்.

★ கடந்த பத்து வருடங்களாக இங்கு இராஜதந்திரிகள் எவரும் வரவில்லை.

அரசு தமிழ் மக்களுக்கும் புலிகளுக்கும் எதிராகப் பொய்ப் பிரசாரம் செய்கிறது எனவே உண்மை நிலையைப் புரிந்துகொள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் இங்கு அடிக்கடி வந்து செல்ல வேண்டும்.

— இவ்வாறு புலிகள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

[உ–3–7]

## கடற்புலிகளின் ஏற்பாட்டில்

# மகளிர் தினக் கூட்டம் இன்று செம்பியன்பற்றில்

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள மகளிர் தின பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு செம்பியன்பற்று பிலிப் மேரிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இதற்கு முன்னதாக கடற்புலிகளின் மகளிர் தின அணி வகுப்பு மாலை 4 மணிக்கு மாமுனைச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி கூட்ட மைதானத்தைச் சென்றடையும்.

கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஜ-14)

யாழ்/ மகா வித்தியாலயம், மல்லாகம்
வருடாந்த இல்ல
## மெய்வல்லுநர் போட்டி - 1995

இடம்:- ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கு
காலம்:- 10.03.1995 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 00 மணி
தலைமை:- திரு. வி. சச்சிதானந்தன் [அதிபர்]
பிரதம விருந்தினர்:- திரு சி. உருத்திரலிங்கம் [பொறியியல் மதி உரைஞர்]
சிறப்பு விருந்தினர்கள்:-
திரு. சி வெற்றிவேலாயுதம் [நிதி உதவியாளர், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்]
திரு. தமிழ்மறவன் [பொறுப்பாளர், மாணவர் அமைப்பு யாழ். மாவட்டம்]
பரிசில் வழங்கல்:-
திருமதி. இராசமலர் உருத்திரலிங்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மேற்படி போட்டியை முன்னிட்டு ஆண்களுக்கான மரதன் ஓட்டமும், பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியும் 8.3 95 காலை 6.00 மணிக்கு பாடசாலையில் இருந்து ஆரம்பிக்கப்படும்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பா. அ. சங்கத்தினர்

விளம்பர அன்பளிப்பு:-
திருவாளர் வைத்திய கலாநிதி
பேரம்பலம் – பத்மநாதன்

[8272]

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி நாகரட்ணம்

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பல்லவராயன்கட்டில் வசித்தவருமான சின்னத்தம்பி நாகரட்ணம் பல்லவராயன்கட்டில் காலமானார்.

இவர் சீதாலக்சுமியின் அன்புக் கணவரும், அருந்தவச்செல்வி (அமுதினி), இரட்ணேஸ்வரன், யசோதினி, தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற டாக்டர் சோமசுந்தரம், திருமதி இராசலக்சுமி சோமசுந்தரத்தின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பல்லவராயன்கட்டில் நடைபெற்றன.

தகவல்:
சோ. சுந்தரராஜன்
(மைத்துனர்)

இல. 2, செட்டித்தெரு,
நல்லூர். (35580)

## சிமியோன் சைமன்

(முன்னாள் பிள்ளையார் விலாஸ் சேல்ஸ்மன்)

கொக்குவில் — கே. கே. எஸ் வீதி 3ம் கட்டையடியை வசிப்பிடமாகக் கொண்ட முன்னாள் பிள்ளையார் விலாஸ் சேல்ஸ்மன், சிமியோன் சைமன் நேற்று காலமானார்.

அவர் தனலட்சுமியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன், லோகேஸ்வரன், நகுலேஸ்வரன், விக்கினேஸ்வரன், தனேஸ்வரன், கமலேஸ்வரன், லோகேஸ்வரி, சைலேஸ்வரி, சைலேஸ்வரன், தனேஸ்வரி, விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், குலதீஸ்வரன், யசோதா, புஸ்பா, ஆனந்தி, புஸ்பராணி, ஜீவா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று [8-3-95] புதன்கிழமை முற்பகல் 10 30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

3ம் கட்டை,
கே. கே. எஸ் வீதி,
கொக்குவில். [35576]

## சின்னத்தம்பி நாகராசா

[கிருஷ்ணபிள்ளை]

தும்பளை பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், நல்லூர் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகராசா [முன்னாள் உரிமையாளர், கல்யாணி ஸ்ரோர்ஸ், கண்டி] காலமானார்.

இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், சுந்தர்ராசன், கமலநாதன், புஷ்பராணி, சரோஜினிதேவி, சாந்தகுமாரி, மகேந்திரன், உதயகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தா, வசந்தகுமாரி, இராசநாதன், சிவநாயகம், பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், சோமஸ்கந்தர், காலஞ்சென்றவர்களான சூரியமூர்த்தி, தருமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நல்லூர் வடக்கு விநாயகர் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (8–3–95) காலை 10 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி நாகராசா பாக்கியம்
(மனைவி)

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு. (35582)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08 03 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org